# கனவு பற்றிய எண்ணக்கரு: சிக்மண்ட் பிராய்ட்டின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு பகுப்பாய்வு

**I.L.M. Mahir, B. Archana**
Department of Social Science
South Eastern University of Sri Lanka
Ilmmahir1971@gmail.com, archanabalasingam@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

கனவு பற்றி ஆராய்ந்த உளவியலாளர்களுள் சிக்மண்ட் பிராய்ட் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெற்று விளங்குகின்றார். கனவு பற்றி பல்வேறு வகையான கருத்துக்கள் அறிஞர்களால் முன்வைக்கப்பட்ட போதும் 1900ஆம் ஆண்டில் சிக்மண்ட் பிராய்டினால் வெளியிடப்பட்ட ''கனவுகளின் விளக்கம்'' எனும் நூல் முக்கியமானது. இவ்வாய்வானது இவர் கனவு பற்றி கூறியிருக்கின்ற கருத்துக்களை உளவியல் ரீதியாக நுணுகி ஆராய்கின்றது. நனவிலி மனதின் பிரதிபலிப்பான கனவுகள் அர்த்தம் நிறைந்தவையாகவும் பொருள் பொதிந்தவையாகவும் காணப்படுவதை பிராய்ட் எடுத்துக்காட்டினார். ஒவ்வொரு கனவுக்கும் பின்னாலும் தொடர்புபட்டிருக்கும் உளக்கூறுகளின் உந்துதலாலேயே கனவுகள் பிறக்கின்றன. அதுவே கனவுக்கான மூலக்காரணியாகும். அம்மூலக்காரணியே கனவுக்கான அர்த்தத்தை தீர்மானிக்கிறது. இவ்வாறு அர்த்தம் பொதிந்த கனவுகள் பகுத்தறிவற்ற தன்மையைக் கொண்டவை என பிராய்ட் விளக்கினார். ஒழுங்கீனமான நனவிலி மனதின் வேட்கைகள் கனவுகளாக வெளிப்படும் போது அவை நடைமுறைக்கு புறம்பானவையாக, பகுத்தறிவுத் தன்மையற்றதாக வெளிப்படுகிறது. இதன் அடிப்படையில் கனவுகள் தோன்றுவதற்கான காரணம், கனவு வெளிப்பாட்டின் உளவியல் தாக்கம் என்பனவற்றை கருத்தில் கொள்வதோடு பகுத்தறிவுக்கு பொருந்தாத காட்சிகளைக் கொண்ட கனவுகளின் அர்த்த வெளிப்பாட்டின் சாத்தியத்தன்மையையும் விளக்குவதாக இவ்வாய்வு அமைகிறது.

***பிரதான சொற்பதங்கள்***: *கனவுகள், அர்த்தம், நனவிலிமனம், பகுத்தறிவுத்தன்மை*

## அறிமுகம்

உளப்பகுப்பாய்வில் கனவுகள் பற்றிய ஆய்வு முக்கிய இடத்தினை வகிக்கிறது. உளவியலாளர்களால் அதிகம் கருத்தில் கொள்ளப்பட்ட கனவுகள் பற்றிய பகுப்பாய்வில் பிரதானமாக ஆய்வுக்குட்படுத்தியவராக சிக்மண்ட் பிராய்டை இனம் காணலாம். உளவியல் வரலாற்றில் மிகப்பிரதான இடத்தை வகிக்கும் 'கனவுகளின் விளக்கம்' (The Interpertation of Dreams - 1900) எனும் நூலானது விஞ்ஞான முறையிலமைந்த முதலாவது கனவு விளக்க நூலாகும்.

உளவியல் வரலாற்றில் உள்ளத்தின் மீதான ஆய்வினை புதிய கோணத்தில் எடுத்தாண்ட பிராய்ட் கனவுகள் பற்றி அதிக அக்கறை எடுத்துக்கொண்டார். நூற்றுக்கணக்கான கனவுகளை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு பல விடயங்களைக் கண்டறிந்து கனவுக்கோட்பாட்டை உருவாக்கினார். அதன் மூலம் அவர் அனைத்து கனவுகளும் அர்த்தமுடையவையாகவும், உட்பொருள் கொண்டவையாகவும் விளங்குகின்றன எனும் கருத்தை வலியுறுத்தினார். கனவுகளை விஞ்ஞான முறைப்படி விளக்கிக்கூறிய பிராய்ட் கனவுகளில் பகுத்தறிவற்ற தன்மையே அதிகமாகக் காணப்படுவதாக அறிவித்தார்.

ஒரு மனிதனின் ஆளுமையை கனவுகளின் மூலம் எவ்வாறு அறிவது எனும் அணுகுமுறையை விளக்கிய பிராய்ட் அதன் பிரதான எடுகோளாக நனவிலியை எடுத்தாண்டார். நனவிலி மனதின் கட்டுக்கடங்காத வேட்கைகள் கனவில் வெளிப்படுகிறது. இதனால் கனவுகள் ஒழுங்கீனமானவையாகவும் பகுத்தறிவுக்கு பொருந்தாத காட்சிகள் கொண்டவையாகவும் அமைந்த போதிலும் அவை அர்த்தமுடையவையாகவும் பொருள் பொதிந்தவையாகவும் காணப்படுகிறது என்ற பிராய்ட் கனவுகளின் பகுப்பாய்வின் மூலம் அதனை விளக்கினார்.
அதாவது கனவுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் அதன் அர்த்தங்களை விளங்கிக்கொள்ள முடியும். உளச்செயற்பாடுகளின் வெளிப்பாடாக கனவுகள் அமையும் போது அவை பகுத்தறிவினடிப்படையில் ஒழுங்குபடுத்தப்படுவதில்லை. எனவே கனவுகளை மனித உள்ளத்தின் பிரதிபலிப்பாக நோக்கியதன் மூலம் பகுத்தறிவுக்கு ஒவ்வாத கனவுகள் முன்னிலைப்படுத்தப்பட்டன. இதனடிப்படையில் கனவுக்கான அர்த்தங்கள் மனித உணர்வுகளின் அடிப்படையில் விளக்கப்பட்டதோடு அதற்கான உளச்சிகிச்சைகளும் மேற்கொள்ளும் முயற்சிகளும் தொடங்கின.

**விஞ்ஞானப் பிரச்சினை**
பகுத்தறிவற்ற தன்மையைக் கொண்டுள்ள கனவுகள் எவ்வாறு பொருள் பொதிந்தவையாக விளங்க முடியும்?

**ஆய்வின் நோக்கம்**

- சிக்மண்ட் பிராய்டின் கனவுகள் பற்றிய எண்ணக்கருவை பகுப்பாய்வு செய்து விளங்கிக்கொள்ளல்.
- கனவுகள் தோன்றுவதற்கான காரணங்களை இனம் கண்டு கனவு வெளிப்பாட்டின் உளவியல் தாக்கத்தினை விளக்குதல்.
- கனவுகளின் பகுத்தறிவற்ற தன்மைக்கான காரணத்தை இனம் கண்டு விளக்குதல்.
- கனவுகளின் அர்த்தங்களை விளக்கும் முறைகளை இனம்கண்டு கனவின் அர்த்தம் பொதிந்த கனவுகள் எவ்வாறு பகுத்தறிவின் வரையறையிலிருந்து வேறுபடுகிறது என்பதை விளக்குதல்.

**ஆய்வு முறை**
இரண்டாம் நிலைத்தரவுகளை பிரதானமாகக் கொண்ட பண்புசார் ஆய்வில் விபரிப்பு முறையுடன் அமைந்த பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**பகுப்பாய்வும் முடிவுகளும்**
இவ் எண்ணக்கருப்பாய்வில் பின்வரும் விடயங்கள் பகுப்பாய்வு ரீதியில் விபரிக்கப்படுமாற்றை அவதானிக்கலாம்.

- நனவிலி மனதின் நிறைவேறாத ஆசைகளையும், வேட்கைகளையும் பூர்த்தி செய்யும் களமாக கனவுகள் வெளிப்படுகின்றன. அவை உளக்கூறுகளின் உந்துதலாக அமையும் போது கனவுகளின் அர்த்தத்தை சாத்தியப்படுத்தியமாகிறது. அவ் அர்த்தத்தை கண்டுபிடிப்பதே கனவுப்பகுப்பாய்வாகும்(Dream analysis).
- நனவிலியின் ஒழுங்கின்மை மற்றும் பகுத்தறிவின்மை காரணமாக அதிலிருந்து வெளிப்படும் கனவுகளும் அதே தன்மையிலேயே காணப்படும். கனவின் நனவிலி வேட்கையை கண்டு பிடித்தல் மற்றும் அவ்வேட்கைத் தீர்வாக கனவை இனம் காணல் என்பனவற்றின் மூலம் மனித உணர்வுகளை அடிப்படையாகக்கொண்டு கனவுக்கான விளக்கம் வழங்கப்படுகிறது.

- நடைமுறையில் பகுத்தறிவு ஏற்படுத்தியிருக்கும் ஒழுங்கமைப்புக்களாலேயே நனவிலி மனத்தின் வேட்கைகள் புதைக்கப்பட்டு அவை கனவுகளாக வெளிப்படும் சாத்தியத்தை ஏற்படுத்துகிறது. இது கனவு வாழ்வுக்கும் நடைமுறை விழிப்பு வாழ்வுக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்தியிருக்கிறது.
- புற உலகின் அனுபவத்தை அடைவதற்கான இடமாக கனவுகள் காணப்படுவதால் அவை பகுத்தறினை விலக்கி மனித நடத்தைகளின் வேட்கையாக வெளிப்படுகிறது. இதனால் கனவுகளின் அர்த்தம் பகுப்பாய்வு செய்யப்படுவதோடு உளவியல் பிரச்சினைகளுக்கான தீர்வாகவும் அவை எடுத்தாளப்படுகின்றன.

**முடிவுரை**

கனவுகளைப்பகுப்பாய்வு செய்வதன் மூலம் உருவாக்கப்படும் அர்த்தங்கள் கனவுகளுக்கான விளக்கமளித்தலாக அமைகிறது. அதன் மூலம் எல்லாக்கனவுகளும் பொருள் பொதிந்தவை எனும் சிக்மண்ட் புராய்டின் கருத்து கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். ஏனெனில் ஒவ்வொரு கனவுக்குப்பின்னாலும் ஏதொவொரு உளக்கூறு அல்லது பல உளக்கூறுகள் தொடர்புபட்டிருக்கும். இவ் உளக்கூறுகளின் உந்துதலாலேயே கனவுகள் பிறக்கின்றன. கனவு உருவாக்கத்தின் மூலக்காரணியாகவும் இவ் உந்துதல் காணப்படுகிறது. இதனையே கனவுகளின் அர்த்தமாக பிராய்ட் கொள்கிறார். எனவே நடைமுறையில் தாக்கம் செலுத்தும் ஒழுங்கமைப்புக்களோ அல்லது பகுத்தறிவின் வரையறைகளோ கனவுகளில் தாக்கம் செலுத்த வாய்ப்பில்லை. இதனால் பகுத்தறிவற்ற தன்மையிலிருந்து கனவுகள் விலகி நிற்கின்றன. இத்தன்மையிலமைந்த கனவுகளே ஒரு மனிதனின் உளப்பிரச்சினைக்கான காரணங்களை அறிய உதவுகிறது. இவ்வகையில் தனி மனித ஆளுமையை வெளிப்படுத்தும் கனவுகளின் அர்த்தத்தினை பகுத்தறிவு தீர்மானிப்பதில்லை எனலாம்.

**உசாத்துணை நூல்கள்**


Eysenck, H.J. (1971), "The structure of human personality", (3rd Ed.), New York, Methuen.

Freud, Sigmund. (1939), "An outline of Psychoanalysis" New York, Norton.

Freud, Sigmund. (1953), "An outline of Psychoanalysis" London, Hogart.

இரவிச்சந்திரன், தி.கு. 2005, "சிக்மண்ட் ∴ப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல்", அலைகள் வெளியீட்டகம்

இரவிச்சந்திரன், 2007, "∴ப்ராய்ட் யுங் லக்கான்", அடையாளம்.

முணி, சி. 2005, "ப்ராய்ட் மிகச் சுருக்கமான அறிமுகம்", அந்தோணி ஸ்டோர்

பூரணச்சந்திரன், ச. ப்ராய்டும் உளப்பகுப்பாய்வும், www.poonachandran.com

Dreams, www.worldtamilswin.com